


# நோயாளியின் உரிமைகள் முக்கியமான தகவல்கள்

நோயாளிகளுக்கு அவர்களுடைய உரிமைகள் பற்றி முழுமையாக தெரிவிக்கப்படும்போது, வழங்கப்படும் சிகிச்சைகளை அவர்கள் பெற்று மருத்துவர்களுடன் தரமான உறவினை வளர்த்துக்கொள்ள முடியும்.

## 1. தகவலறியும் உரிமை

நோயாளிகள் அவர்களின் ஆரோக்கியத்தின் நிலை, அவர்களின் பரிசோதனைகள் மற்றும் சாத்தியமுள்ள சிகிச்சைகள், விளைவுகள் மற்றும் சம்பந்தப்பட்ட ஆற்றல்மிக்க அபாயங்கள், மேலும் நோய் முன்கணிப்புகள் மற்றும் சிகிச்சையின் நிதிசார்ந்த பிரச்சினைகள் ஆகியவற்றைப் பற்றிய தெளிவான மற்றும் பொருத்தமான தகவல்களைப் பெறுவதற்கு உரிமை பெற்றுள்ளனர். நோயாளிகள் ஒரு மருத்துவமனையில் அனுமதிக்கப்படும்போது, அடிப்படையில் அவர்கள் தங்களின் உரிமைகள் மற்றும் சட்டப் பொறுப்புகள் குறித்தும், அதோடு அவர்கள் தங்கியிருக்கும் நிலைமை குறித்தும் எழுத்து மூலமான தகவலைப் பெற வேண்டும்.

## 2. இலவச மற்றும் தகவலளிக்கப்பட்ட ஒப்புதல்

நோயாளி வயதுவந்தோர் அல்லது இளம் பிராயத்தினர் யாராக இருந்தாலும், அவரிடம் பகுத்தறியும் திறன் குறித்த இலவச மற்றும் தகவலளிக்கப்பட்ட ஒப்புதல் பெறாமல் சிகிச்சை வழங்கப்பட மாட்டாது. நோயாளி விரும்பும் பட்சத்தில் மருத்துவக் கவனிப்பினை மறுப்பதற்கு, எந்த ஒரு சிகிச்சையிலிருந்தும் விலகிக்கொள்வதற்கு அல்லது மருத்துவமனைப் பராமரிப்பிலிருந்து வெளியேறுவதற்கு அவருக்கு உரிமையுள்ளது.

## 3. இயலாமை ஏற்படும் நிகழ்வில் முன்கூட்டிய வழிகாட்டுதல்கள், சிகிச்சை பிரதிநிதிகள் மற்றும் உரிமையளித்தல்

தனிநபர்கள் அனைவரும் தங்களுடைய சொந்த விருப்பத்தினை வெளிப்படுத்தும் திறன் இல்லாத பட்சத்தில் அவர்கள் பெற விரும்பும் சிகிச்சையின் வகை குறித்து முன்கூட்டிய வழிகாட்டுதல்களைக் குறிப்பிட்டுத் தெரிவிப்பதற்கான உரிமையைப் பெற்றுள்ளனர். மேலும், அவர்கள் சிகிச்சைப் பிரதிநிதி எனப்படும் தனிநபர் ஒருவரையும் நியமித்துக்கொள்ள முடியும், சிகிச்சை பெறுவோர் தானாகவே எதையும் பேச முடியாத சூழ்நிலை ஏற்படும் பட்சத்தில் வழங்கப்படும் சிகிச்சையை அவரின் சார்பாக அவருடைய பிரதிநிதி தேர்ந்தெடுப்பார்.

## 4. தேர்ந்தெடுக்கும் சுதந்திரத்துக்கான உரிமை

வெளிநோயாளியாக சிகிச்சை பெறும் பட்சத்தில், அனைத்து நோயாளிகளும் தாங்கள் பார்க்க விரும்பும் மருத்துவரை சுதந்திரமாக தேர்ந்தெடுப்பதற்கான உரிமையைப் பெற்றுள்ளனர். முக்கியமாக, அவர்கள் சிகிச்சை பெற விரும்பும் மருத்துவமனையை சுதந்திரமாகத் தேர்ந்தெடுப்பதற்கான உரிமையையும் பெற்றுள்ளனர், அது அரசு மருத்துவமனையாகவோ அல்லது பொதுநலனுக்காக அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாகவோ இருக்கலாம். மருத்துவ வல்லுநர் அல்லது மருத்துவமனையைத் தேர்ந்தெடுப்பதற்கான இந்த சுதந்திரம் ஏதேனும் அடிப்படை மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் வழங்கப்பட்டுள்ள சிகிச்சை வகையால் மறைமுகமாக கட்டுப்படுத்தப்படலாம், அது குறிப்பாக மண்டலத்துக்கு வெளியே மேற்கொள்ளப்படும் மருத்துவச் சிகிச்சைக்கு பகுதியளவு காப்பீட்டை மட்டுமே வழங்கக்கூடும்.

## 5. கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் ஒப்புதல் இல்லாமல் மேற்கொள்ளப்படும் சிகிச்சை

முக்கியமாக, ஒரு நோயாளி மீது திணிக்கப்படும் எந்த ஒரு கட்டுப்பாட்டு நடவடிக்கையும் தடை செய்யப்பட்டுள்ளது. அவர்கள் ஒப்புதலின்றி அளிக்கப்படும் எந்த ஒரு சிகிச்சைக்கும் இது பொருந்தும். இருந்தாலும், சுதந்திரமாக இயங்குவதை அல்லது ஒப்புதலின்றி அளிக்கப்படும் சிகிச்சையை கட்டுப்படுத்துவதற்கான சில நடவடிக்கைகள் மிகவும் கண்டிப்பான சூழ்நிலையில் சுமத்தப்படலாம்.

## 6. தொழில்முறை இரகசியம்

நோயாளிகள் தங்களுடைய விவரங்களை இரகசியமாக வைத்துக்கொள்வதற்கான உரிமை பெற்றுள்ளனர். மருத்துவ நிபுணர்கள் மருத்துவ இரகசியம் எனப்படும் தொழில்முறை இரகசியத்தை மதிக்கும் கடமைப்பொறுப்பைக் கொண்டுள்ளனர். தொழில் மேற்கொள்ளும்போது தங்களுக்குத் தெரியவரும் எந்தத் தகவலையும் அவர்கள் வெளியிடக் கூடாது. சட்டப்படியான கோரிக்கை விடுக்கப்பட்டால் ஒழிய, நோயாளியின் ஒப்புதலின்றி இந்தத் தகவலகளை யாருக்கும் தெரியப்படுத்தக் கூடாது. தொழில்முறை இரகசியம் மருத்துவ வல்லுநர்களுக்கும் பொருந்தும்.

## 7. கோப்புகளுக்கான அணுகல்

நோயாளிகள் தங்கள் கோப்புகளை அணுகுவதற்கும், ஏதேனும் விளக்கம் கேட்பதற்கும் உரிமை பெற்றுள்ளனர். முக்கியமாக, அவர்கள் இந்த ஆவணத்தின் எந்த ஒரு பகுதியின் இலவசப் பதிப்பின் அசல் அல்லது நகலைப் பெற முடியும், மேலும் அவர்கள் விரும்பும் மருத்துவ வல்லுநரிடம் அதைக் காண்பிக்க முடியும்.

## 8. துணையாளை அழைத்து வருவதற்கான உரிமை

மருத்துவமனையில் தங்கும் நோயாளிகள் அவர்கள் தங்கும் காலம் முழுமைக்கும் உதவியையும் ஆலோசனையையும் பெறுவதற்கான உரிமை பெற்றுள்ளனர். தங்களின் நெருங்கிய உறவினர்களின் ஆதரவைப் பெறுவதற்கும், நண்பர்கள் மற்றும் குடும்பத்தினரைத் தொடர்பு கொள்வதற்கும் அவர்களுக்கு உரிமை உள்ளது. அவர்கள் விரும்பினால் வெளிநபரையும் உதவிக்கு அழைத்துக்கொள்ள முடியும்.

## 9. உறுப்பு மற்றும் திசு தானம்

தனிநபர்கள் தங்கள் வாழ்நாளின்போது உறுப்பு மாற்று அறுவைச்சிகிச்சைக்காக தங்கள் உறுப்புகளை தானமாகக் கொடுப்பதற்கு தீர்மானிக்கலாம். மரணமடைந்த ஒருவரின் விருப்பங்களுக்கு அவரின் நெருங்கிய உறவினர்களின் விருப்பத்தை விட முன்னுரிமை வழங்கப்படுகின்றது. உறுப்புகள், திசுக்கள் அல்லது செல்களை இலவச தானம் செய்ய வேண்டும்; அவற்றை இலாபத்துக்காக விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.

## உங்களுக்கு ஏதேனும் உதவி, தகவல் அல்லது ஆலோசனை தேவைப்படுகின்றதா?

### தயவுசெய்து “நோயாளிகளின் உரிமை குறித்த முக்கியமான தகவல்கள்” என்ற முழுமையான சிற்றேட்டை கேட்டுப் பெறவும் அல்லது உங்கள் பிரதேசத்திலுள்ள சுகாதார அதிகாரிகளைத் தொடர்பு கொள்ளவும்:

#### கான்டன் ஆஃப் பெர்ன்

Direction de la santé publique
et de la prévoyance sociale

Rathausgasse 1, 3011 Berne

Tél. 031 633 79 20
info@gef.be.ch
www.gef.be.ch

#### ஜூரா குடியரசு மற்றும் கான்டன்

Service de la santé publique
Médecin cantonal

Fbg des Capucins 20,
2800 Delémont

Tél. 032 420 51 33
medecin.cantonal@jura.ch

#### கான்டன் ஆஃப் வாலைஸ்

Service de la santé publique
Office du médecin cantonal

Av. du Midi 7, 1950 Sion

Tél. 027 606 49 00
santepublique@admin.vs.ch
www.vs.ch/sante

#### கான்டன் ஆஃப் ஃப்ரைபோர்க்

Service de la santé publique
Rte des Cliniques 17, 1700 Fribourg

Tél. 026 305 29 13
ssp@fr.ch
www.fr.ch/ssp

#### கான்டன் ஆஃப் நியூசாடெல்

Service de la santé publique (DFS)
Rue Pourtalès 2, 2000 Neuchâtel

Tél. 032 889 52 09
www.ne.ch/santepublique

#### கான்டன் ஆஃப் வாட்

Service de la santé publique
Bâtiment administratif de la Pontaise

Avenue des Casernes 2,
1014 Lausanne

Tél. 021 316 42 00
info.santepublique@vd.ch
www.vd.ch/ssp

#### ஜெனீவா குடியரசு மற்றும் கான்டன்

Direction générale de la santé
Service du médecin cantonal

Av. de Beau-Séjour 24,
Case postale 76,
1211 Genève 4 Plainpalais

Tél. 022 546 50 00
www.ge.ch/deas

#### டிசினோ குடியரசு மற்றும் கான்டன்

Dipartimento della sanità
e della socialità
Ufficio Medico cantonale

Via Dogana 16, 6500 Bellinzona

Tél. 091 814 30 50
dss-umc@ti.ch
www.ti.ch/promozionesalute

